# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே





நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com



செவ்வாய்க்கிழமை 18.10.2022 supeedsam.com supeedsam@gmail.com


# பெப்ரவரி மாத பிற்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும்

## அனுராதபுரத்தில் கோர விபத்து

### மூவர் உயிரிழப்பு : இருவர் காயம்



அனுராதபுரம்-பதெனிய வீதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை காலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரொன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது காரில் ஐந்து பேர் பயணித்துள்ளதாகவும் விபத்தில், காயமடைந்தவர்கள் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## பெற்றோல்- டீசலின் விலை குறைப்பு

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் திங்கட்கிழமை இரவு 9 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அதன்படி, 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின்


02 ஆம் பக்கத்தில்...







## தேர்தல்கள் ஆணைக்குழு

எதிர்வரும் வருடம் மார்ச் 20ஆம் திகதிக்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

சட்டத்தின்படி அன்றைய தினத்திற்குள் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் அமைக்கப்பட வேண்டும் என ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.


02 ஆம் பக்கத்தில்...






*மட்டக்களப்பு ஈரளக்குளம் குடாவெட்டையில் மனைவி 29.06.2022 அன்றும், 4 மாதத்திற்குள் அதே இடத்தில் 16.10.2022 நேற்றுமுன் தினம் கணவரும் யானைதாக்கி ஒரு குடும்பத்தையே அழித்த துயரம்யாரிடம் முறையிடுவது.*

## ௨௨ இல் இரு திருத்தங்கள் மாத்திரமே



22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் எதிர்கட்சி தலைவரால் கோரப்பட்டுள்ள இரு திருத்தங்களை மாத்திரமே மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள நிலையில் வேறு திருத்தங்களை மேற்கொள்வதற்கு எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.


02 ஆம் பக்கத்தில்...


## தமிழ் பிரிவினைவாதிகளின் பணத்தை ஏற்றுக்கோள்வோம்; அவர்களின் கோரிக்கையை ஏற்கமாட்டோம்




தமிழ் பிரிவினைவாதிகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவே நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் ஹெரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்


02 ஆம் பக்கத்தில்...


## காலநிலை செயலகம் வரவேற்கும் அமைச்சர்

(ந.குகதர்சன்)



காலநிலை மாற்றம் தொடர்பான செயலகத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை வரவேற்கத்தக்கதென, சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கோப் 27 காலநிலை மாநாடு நவம்பரில் எகிப்தில்


02 ஆம் பக்கத்தில்...


## போதுத் தேர்தலில் கூட்டணி அமைப்பது குறித்து பசிலுடன் ரணில் பேச்சு?



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் ஞாயிற்றுக்கிழமை தொலைபேசியில் கலந்துரையாடியதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எவ்வாறு கூட்டணி அமைப்பது


02 ஆம் பக்கத்தில்...


## கமல்ஹாசனை சந்தித்தார் சிறீதரன்!



மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும் நடிகருமான கமல்ஹாசனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

சிறீதரன் தமிழகத்துக்கு விஜயம் செய்திருந்த நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெற்றது.


02 ஆம் பக்கத்தில்...



## இருளில் மூழ்கியது ரூபவாஹினி

சுமார் 70 இலட்சம் ரூபாய் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாமை காரணமாக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கான மின்சார விநியோகத்தை நேற்று (17) பிற்பகல் இடைநிறுத்துவதற்கு இலங்கை மின்சார


02 ஆம் பக்கத்தில்...







சுவிஸ் லுற்சேன் தமிழ் மன்றத்தின் 30வது ஆண்டு விழாவின்போது பிரபலவர்த்தகரும், சமூகசேவையாளருமான ஸ்ரீ இராசமாணிக்கம் அவர்களை கௌரவித்து பொன்னாடைபோர்த்திவாழ்த்துமடல் வழங்கியபோது பிடிக்கப்பட்ட படம்.

## கமல்ஹாசனை சந்தித்தார் சிறீதரன்!

இதன்போது இலங்கைத் தமிழ் மக்களின் பூர்வீக நில ஆக்கிரமிப்பு, மாகாணங்களுக்குரிய அரசியல் அதிகாரம், மொழி அடிப்படையில் தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினை என்பன பற்றி பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## காலநிலை செயலகம் வரவேற்கும் அமைச்சர்

நடைபெற உள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இலங்கையில் இச்செயலகத்தை நிறுவ தீர்மானித்துள்ளமை தூரதிருஷ்டியுள்ள நடவடிக்கை என்றும் அமைச்சர் நஸீர்/அஹமட் வரவேற்றுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளதாவது.

காலநிலை மாற்றத்தால் உலகம் பெரும் ஆபத்தை எதிர்கொள்கிறது. இதனால் ஏற்படும் அழிவுகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ள வல்லரசுகள் முயல்கின்றன. இந்த முயற்சிகளை முன்னுதாரணமாகக் கொண்டுதான், இலங்கையிலும் காலநிலை மாற்றம் தொடர்பான செயலகம் நிறுவப்பட உள்ளது.சூழலைப் பாதுகாத்து மக்களை சுகதேகிகளாக வாழ வைக்கும் ஜனாதிபதியின் முடிவு சாலச்சிறந்ததும், காலத்துக்கேற்றதுமாகும்.

மேலும், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் நிறுவப்படவுள்ளதுடன், இம்மாற்றங்களை கையாள்வதற்கான சட்ட மூலமும் தயாரிக்கப்படவுள்ளது. இதுபோன்ற ஜனாதிபதியின் முன்னோடி வியூகங்கள் காலநிலையால் பாதிக்கப்படும் எமது நாட்டையும் பாதுகாக்க உதவும் என்றும் அமைச்சர் நஸீர் அஹமட் நம்பிக்கை தெரிவித்தார்.

## 22 இல் இரு திருத்தங்கள் மாத்திரமே

கொழும்பில் இன்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றும் போதே அமைச்சர் விஜயதாச ராஜபக்ச இதனை தெரிவித்தார்.

அத்துடன் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே கையுயர்த்தி நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான காலத்தினை நான்கரை வருடங்களாக மாற்றிக்கொண்டுள்ளனர்.

ஆகையினால் நாங்கள் அந்த பரிந்துரையில் எவ்வித மாற்றங்களையும் செயற்படுத்த முயற்சிக்கவில்லை.

19 ஆவது திருத்தத்திலேயே நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான காலம் நான்கரை வருடத்திலிருந்து இரண்டரை வருடமாக குறைக்கப்பட்டது.

20 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்களே அதனை நான்கரை வருடங்களாக்கியுள்ளனர்.

நாடாளுமன்றத்தினை நான்கரை வருடத்தில் கலைப்பதற்கு அனைத்து எதிர்கட்சிளும் இணங்கியுள்ளன. அத்துடன், இரட்டை குடியுரிமை தொடர்பில் சட்ட பீதியான தீர்வுகள் காணப்படுகின்றமையினால் அதனை நீக்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. 22 ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் மக்களுக்கே அதிக தேவையாக காணப்படுவதால் இதனை நாங்கள் நிறைவேற்றிக்கொள்வோம் என எதிர்பார்க்கின்றோம்.

19 ஆவது அரசியலமைப்பு திருதத்தின் உண்மை தன்மையை எடுத்துணர்த்திய போதே அதற்கு அதிகமானோர் வாக்களித்தனர்.

அதனை போன்றே இதற்கும் 150 பேர் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது என அமைச்சர் விஜயதாச ராஜபக்ச குறிப்பிட்டார்.

## பொதுத் தேர்தலில் கூட்டணி அமைப்பது ...

என்பது குறித்து அவர்கள் இதன்போது ஆலோசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்புமனு வழங்கும் போது ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் தலைவரையும் விமர்சிக்கும் அல்லது கட்சியைவிட்டு வெளியேறிய எவருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வேட்புமனுக்களை வழங்கக்கூடாது என இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை விமர்சித்து ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனுக்களை எதிர்பார்ப்பவர்களுக்கும் வேட்புமனு வழங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து கூட்டணி அமைத்தால், அக்கட்சிகளுக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டின் அடிப்படையில் அக்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வேட்புமனுக்கள் வழங்கப்படும் என முடிவு எட்டப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பெப்ரவரி மாத பிற்பகுதியில்

எனவே, 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாத பிற்பகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தற்காலிகமாக முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த ஆண்டு பெப்ரவரி இறுதிக்குள் 18 வயதை பூர்த்தி செய்தவர்களை பட்டியலிடுவதன் மூலம் 2022 வாக்காளர் பதிவேட்டை இந்த மாத இறுதிக்குள் சான்றளிக்க தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பிறகு, செப்டம்பர் 30ஆம் திகதிக்குள் 18 வயது பூர்த்தியடைந்தவர்களின் பெயர்கள் அடங்கிய துணைப் பட்டியலைத் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, 2022 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேடு நவம்பர் நடுப்பகுதிக்குள் இறுதி செய்யப்படும் என்றும் இதன்மூலம் 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கதிரவன் பட்டி மன்ற பேரவை...




கதிரவன் பட்டி மன்ற பேரவை
சாதனைகள் பல படைத்து சரித்திரத்தில்
தடம் பதிக்கட்டும்..!

கதிரவன் பட்டிமன்றப்பேரவையின் நூறா
வது பட்டிமன்றம் இது..!
அரசியல் கட்சியாக இலங்கை தமிழ்
அரசு கட்சி வாழ்த்துகிறது..!
அதிதிகளாக அழைப்பதில் தமிழ் அரசி
யல் வாதிகளுக்கு தடை..!
ஆயினும் தமிழ்தேசிய அரசியலில்
ஆணிவேர்தானே நீங்கள்..!

இலங்கை தமிழரசு கட்சியின் ஈடு
இணையில்லா பற்றாளர்கள்..!
எங்கள் கட்சி விழாக்களில் எல்லாம்
பட்டிமன்றம் நடத்திய கலைஞர்கள்.!
பற்றுள்ள தமிழ் உணர்வாளர்கள்
பாரம்பரிய படைப்பாளிகள்.!
எப்படி உங்களை நாங்கள் பாராட்டாமல்
இருக்க முடியும்.!

அரசியல் இன்றி அரிசி பருப்பு
எரிபொருள் அடுப்பும் இல்லை.!
அன்றாட வாழ்க்கை வழிவகைகள்
அறிவுசார் கல்வி விவசாயம்!
அரசாங்க திணைக்களம் அதிகார
நிர்வாகம் ஆதிக்கம்.!

அனைத்திலும் இரண்டறக்கலந்தது
அல்வா இந்த நாட்டு அரசியல்.!

உரிமைப்போர் அரசியலால்தானே
தமிழர்க்கு உணர்வைத்தந்தது..!
உண்மைக்காய் உழைத்தமையால்தானே
ஈழத்தில் தமிழும் நிலைத்தது..!
கலை இலக்கிய பண்பாடுகள் எல்லாம்
அதனால் தடையின்றித்தழைத்தது..!
தமிழ்தேசியம் தடம்மாறாமல் இருப்ப
தால்தானே தாயகம் சிரித்தது.!

கதிரவன் பட்டி மன்றம் உள்ளதால்தான்
கிழக்கும் வெளுத்தது.!
கல கலப்பாய் கருத்துகள்
காதுகளில் இனித்தது.!
கண்ணியமாய் நூறு மேடை காணவும்
எமை வைத்தது..!

கைகூப்பி பாராட்டி வாழ்த்தவே நாமும்
இங்கு வந்தது..!

உங்கள் பணி ஓங்கட்டும் உலகமெலாம்
அறியட்டும்.!
பொங்கு தமிழ் போல் என்றும் மங்காமல்
வாழட்டும்.!
சங்கே முழங்கென்று தமிழ் கதிரவன்
பட்டி மன்றம் வளரட்டும்.!
சாதனைகள் பல படைத்து சரித்திரத்தில்
தடம் பதிக்கட்டும்..!

-இலங்கை தமிழ் அரசுக்கட்சி-
மட்டக்களப்பு மாவட்டம்-
16/10/2022

**கவிதாக்கம்:**
**அம்பிளாந்துறையூர் அரியம்**

## பெற்றோல்- டீசலின் விலை குறைப்பு

விலை 40 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 92 ரக பெற்றோலின் புதிய விலை 370 ரூபாயென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, டீசலின் புதிய விலை 415 ரூபாயென அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய பெற்றோலிய பொருட்களின் விலை அப்படியே இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் பிரிவினைவாதிகளின் பணத்தை ஏற்றுக்கொள்வோம்...

என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்துரைக்கையிலேயே உதய கம்மன்பில இதனை தெரிவித்தார்.

அத்துடன், பயனற்ற வகையில் நிதியினை வீணடித்த குற்றச்சாட்டில் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஒருவரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எவ்வாறு தனது ஆலோசகராக நியமிக்க முடியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஹெரிக் சொல்ஹெய்மின் உண்மையான தொழில் என்னவொன்றால், தமிழ் பிரிவினைவாத குழுக்களுடன் ஜனாதிபதிக்கு தொடர்பினை ஏற்படுத்திக்கொடுப்பதே அவரின் நோக்கமாகும்.

பல்வேறு நாடுகள் இலங்கைக்கு தொடர்ந்தும் உதவியளிக்க போவதில்லை என தெரிவித்துள்ளன.

இந்த நிலையிலேயே தமிழ் பிரிவினைவாத அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஆட்கடத்தல், ஆயுத வர்த்தம், தொல்பொருள் வர்த்தகம், பணச்சலவை செய்தல், உள்ளிட்ட பல வர்த்தகங்கள் வாயிலாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் வருமானத்தினை தேடிக்கொண்டனர்.

வருடத்திற்கு 100 மில்லியன் டொலர்களை வருமானமாக பெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, யுத்தத்தினை செய்வதும், புலிகளின் வங்கி, புலிகளின் நீதிமன்றம், புலிகளின் காவல் துறை, ஆகியனவற்றை நடத்திச் செல்வதுமே செலவீனமாக காணப்பட்டது.

தற்போது விடுதலை புலிகளின் அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டிருந்தாலும், வருமானம் தொடர்ந்து கிடைக்கப்பெறுகின்றன. இந்நிலையில், தமிழ் பிரிவினைவாத அமைப்புக்களின் கோரிக்கைகளை இந்நாட்டில் நிறைவேற்றி, அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி தேவைகளை நிறைவேற்றிக்கொடுத்து பணத்தினை பெற்றுக்கொள்ளும் பொறுப்பே ஹெரிக் சொல்ஹெய்ம் இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ் பிரிவினைவாதிகளின் பணம் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டால் அதற்கு நாம் எதிர்ப்பினை வெளிப்படுத்த போவதில்லை.

ஆனால் அவர்களின் விருப்பங்களை இந்நாட்டில் நிறைவேற்றுவது தவறாகும். நாட்டில் பட்டினியை போக்க யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேட்டுக்கொண்டார்.

## இருளில் மூழ்கியது ரூபவாஹினி

சபை தீர்மானித்துள்ளது.

மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் அலைவரிசைகளின் தொடர்ச்சியான செயற்பாடுகளில் சிக்கல் ஏற்பட்டதாகவும் மின் பிறப்பாக்கிகள் மூலம் ஒளிபரப்புகளை மேற்கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல மாதங்களாக மின் கட்டணத்தை செலுத்த ரூபவாஹினி தவறி இருந்ததாகவும், சுமார் 90 லட்சம் ரூபாய் நிலுவைத் தொகையில் சுமார் 20 லட்சம் ரூபாய் செலுத்தப்பட்டதாகவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு



களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி.
நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை 170 சதுர அடி.
குளியல் அறை, மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)

அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.

தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# அருந்ததி

இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**21276 | வே | 1993**
புத்தூர் | இந்து | B.Eng
Engineer
பூராடம் (தனுசு)
172 செ.மீ | செவ்: 02

**23671 | வே | 1991**
குரும்பசிட்டி | இந்து | B.Com
Jr.Executive @ Bank
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**25090 | வே | 1990**
நயினாதீவு | இந்து | Diploma
Branch in charge
அஸ்வினி (மேடம்)
167 செ.மீ | செவ்: 04

**21372 | வே | 1988**
உரும்பிராய் | இந்து | MBA
Sr.Finance Executive
அஸ்வினி (மேடம்)
180 செ.மீ | செவ்: 12

**21297 | வே | 1987**
அரசடி | இந்து | AAT
Managing Partner
உத்தரம் (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 12

**25081 | பி | 1986**
தெஹிவளை | இந்து | MD
Investigation Officer
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**20931 | வே | 1993**
கந்தர்மடம் | இந்து
MBBS | Doctor
ரோகிணி (ரிஷபம்)
160 செ.மீ

**20733 | வி | 1992**
யாழ்நகர் | இந்து | BSc
Senior QS | Qatar
கேட்டை (விருச்சிகம்)

**23788 | வே | 1995**
வேலணை | இந்து | BD
Software Engineer
சித்திரை (துலாம்)
168 செ.மீ

**20538 | வே | 1989**
காரைநகர் | இந்து | B.Eng,
MBA | Electrical Engineer
விசாகம் (துலாம்)
170 செ.மீ | சூ.செவ்: 08

**21102 | வே | 1987**
மீசாலை | இந்து | BSc
Civil Engineer
பூசம் (கடகம்)
174 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**21321 | வே | 1993**
புங்குடுதீவு | இந்து | BSc
Tech. Support Engineer
மூலம் (தனுசு)
185 செ.மீ | சூ.செவ்: 09

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

**20706 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | BSc
Civil Engineer | UK
அவிட்டம் (கும்பம்)
170 செ.மீ | செவ்: 12

**25102 | வே | 1989**
வேலணை | இந்து | HND
Realtor & Insurance
Executive | பூராடம் (தனுசு)
170 செ.மீ | சூ.செவ்: 03

**20850 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | BSc
Quantity Surveyor
பூராடம் (தனுசு) | UK
182 செ.மீ

**21324 | வே | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Development Officer
கேட்டை (விருச்சிகம்)
177 செ.மீ | செவ்: 02

**21033 | கோ | 1992**
கைதடி | இந்து | BSc
Quantity Surveyor
புனர்பூசம் (மிதுனம்) | UAE
170 செ.மீ | செவ்: 07

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**21510 | வே | 1996**
இணுவில் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
169 செ.மீ | India

**20874 | வே | 1994**
வேலணை | இந்து | Reading
MBA | Audit Trainee
உத்தரட்டாதி (மீனம்)
156 செ.மீ | செவ்: 02

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சூ.செவ்: 10

**20619 | வே | 1991**
யாழ்நகர் | இந்து | ACCA
Assistant Manager
உத்திரட்டாதி (மீனம்)
170 செ.மீ

**21471 | வே | 1990**
நீர்வேலி | இந்து | MD, SLAS
Assistant Director
மிருகசீரிடம் (மிதுனம்)
163 செ.மீ | செவ்: 08

**21333 | வே | 1985**
தும்பளை | இந்து | BA
Assistant | Divorced
சித்திரை (துலாம்) | UK
152 செ.மீ

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்) | கனடா
156 செ.மீ

**20694 | வே | 1995**
நெடுந்தீவு | இந்து
BFA | Teacher
பூராடம் (தனுசு)
153 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**20883 | வே | 1993**
வேலணை | இந்து | HNDA
Development Officer
விசாகம் (விருச்சிகம்)
157 செ.மீ | செவ்: 07

**21444 | வே | 1991**
திருகோணமலை | இந்து
MSc | Software Engineer
பரணி (மேடம்)
153 செ.மீ | செவ்: 08

**21105 | வே | 1987**
மானிப்பாய் | இந்து | MD
Development Officer
பரணி (மேடம்) | Divorced
165 செ.மீ | சூ.செவ்: 07

**21300 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | BSc
Dental Surgeon | சைவம்
கேட்டை (விருச்சிகம்)
157 செ.மீ | சூ.செவ்: 10

**23710 | வே | 1996**
நெல்லியடி | இந்து
BSc | Student
திருவோணம் (மகரம்)
151 செ.மீ | சூ.செவ்: 06

**21132 | கோ | 1994**
கைதடி | இந்து | Following
B.Com | Management
Assistant | சதயம் (கும்பம்)
156 செ.மீ | செவ்: 02
Divorced

**23749 | வே | 1993**
வவுனியா | இந்து
MBBS | Doctor
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து | MBBS
Doctor | Norway
அத்தம் (கன்னி)
154 செ.மீ | சூ.செவ்: 06

**23821 | வே | 1998**
வவுனியா | இந்து
A/L | Accountant
பூரம் (சிம்மம்)
154 செ.மீ | செவ்: 07

**20853 | கோ | 1999**
சுன்னாகம் | இந்து
A/L | Accountant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 08

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# மட்டக்களப்பில் பிரமாண்டமாக இடம்பெற்ற அருந்ததியின் 'மாற்று மோதிரம்' நிகழ்வும்,மணப்பெண் அலங்கார கண்காட்சியும்!!




















**(கல்லடி நிருபர்)**

திருமண சேவை மற்றும் மணப்பெண் அலங்காரக் கலைகளை நடத்தி வருகின்ற அருந்ததி நிறுவனம் நேற்றைய தினம் (15) திகதி மட்டக்களப்பு அஞ்சனா கிராண்ட் பலஸ் ஹோட்டலில் 'மாற்று மோதிரம்' எனும் தொனிப்பொருளில் கண்காட்சி நிகழ்வொன்றை மிகப்பிரமாண்டமாக நடாத்தியிருந்தது.

அருந்ததி நிறுவனத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தலைமையில் நடைபெற்ற 'மாற்று மோதிரம்' கண்காட்சிக்கு பிரதம அதிதிகளாக புத்தகப் புரவலர் காசீம் உமர், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன், இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் பாராளுமன்ற செயலாளர் ரீ.ஈஸ்வரராஜா, புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் நடராஜா ரவிக்குமார், அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள இத்துறை சார்ந்தவர்களது வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பில் நடாத்தப்பட்ட இக்கண்காட்சியில் கேக் கண்காட்சி, மணப்பெண் அலங்காரக் கண்காட்சி, திருமண சேவை, கொட்டுமேளக் காட்சி, மாற்றுமோதிர காட்சிகள் மேடையேற்றப்பட்டதுடன், இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியாகும் 'அருந்ததி' பத்திரிகை அறிமுகமும் இடம்பெற்றிருந்தது.

இதன்போது கிழக்கு மாகாணத்திலுள்ள கேக், மணப்பெண், உள்ளிட்ட வடிவமைப்பாளர்கள் பங்குகொண்டதுடன், அவர்களின் இத்தொழில் ரீதியான ஆலோசனைகளும், அதுதொடர்பான வியாபார யுக்திகளும், வியாபாரத்திற்குரிய வர்த்தக இணைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டதுடன், இதன்போது கேக் வடிவமைப்பாளர்கள், அழகுக்கலை நிபுணர்களது திறமைகளை பாராட்டி உயரிய விருதுகள், நினைவுச்சின்னங்கள் மற்றும் பரிசுப்பொருட்கள் என்பன அதிகளினால் வழங்கி வைக்கப்பட்டதுடன், இந்நிகழ்விற்கு அனுசரனையாளர்களாகவும், அதிதிகளாகவும் கலந்துகொண்டவர்களை நிகழ்வின் ஏற்பாட்டாளரான கந்தசாமி கருணாகரன் மற்றும் அருந்ததி நிறுவனத்தின் பணிப்பாளர் கே.மேகலா ஆகியோர் இணைந்து பொன்னாடை போர்த்து நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு இந்தியா நிபந்தனை விதித்துத்தான் உதவி செய்யவேண்டும்

## சிவசக்தி ஆனந்தன்

(ரக்ஸனா)

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டக வேண்டும். தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும், இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய அரசு 4 பில்லியன் நிதி உதவி செய்துள்ளது. எனவே இந்திய அரசாங்கம் இலங்கை அரசுக்கு நிபந்தனை இல்லாமல் செய்கின்ற உதவிகளைத் தவிர்த்து நிபந்தனையுடன் உதவி செய்யவேண்டும்,

என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகள் விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். அக்கட்சியின் முன்னாள் தலைவர் உள்ளிட்ட மறைந்த தியாகிகளை நினைவுகூரும் நிகழ்வு ஞயிற்றுக்கிழமை (16) மாலை மட்டக்களப்பு பெரியகல்லாற்றில் இடம்பெற்றது. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை உறுப்பினர் கணேசானந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயெ அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில். எமது கட்சியிலிருந்து தோழர்களின் இழப்பானது எமது கட்சிக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் மாத்திரமின்றி முழு தமிழ் மக்களுக்கே பாரிய இழப்பாகும். தமிழ் மக்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும்தான் எமது வீரர்கள் போராடச் சென்றார்கள். அவர்கள் சகோதரப் படுகொலைகள் மூலமும், இலங்கை அரசாங்காத்தின் மூலமும்தான் அவர்கள் படுகொலை செய்யப்பட்டடிருந்தார்கள். இவ்வாறு அவர்கள் படுகொலை செய்யப்பட்டு 40 வருடங்களைக் கடந்தும் தமிழ் மக்கள் நிம்மதியையோ, சமாதானத்தையோ இதுவரையில் எட்ட முடியாத நிலமையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அது மாத்திரமின்றி தமிழ் மக்க்ள மத்தியில் காணப்படும் கட்சிகளும், சிதறி சின்னா பின்னமாக்கப்பட்டிருக்கின்ற நிலமையில்தான் நாம் தற்போதும் இருந்து கொண்டிருக்கின்றோம். இது எமக்கு ஒது துரதிஸ்ட்டவசமாகும்.






எதிர்காலத்திலாவது உயிர்நீத்த தோழர்கள், போராளிகள், மற்றும் பொதுமக்களின் கனவுகள், நிறைவேற வேண்டுமாக இருந்தால், இந்த மண்ணிலே தமிழ் மக்கள் கௌரவமாகவும், சுதந்திரமாகவும், போராளிகளினதும், மக்களினதும் தியாகங்களைக் கருத்திற் கொண்டு தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும். அதற்குரிய காலம் வந்து கொண்டிருப்பதாக நான் நினைக்கின்றேன்.

அரசாங்கத்தில் பல்வேறுபட்ட குழப்பங்களும், தென்பகுதியிலே பல்வேறுபட்ட குழப்பங்களுடன் மிகவும் மோசமானதாகவும் இருந்தாலும்கூட தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாட்டை கைவிடுவதாக இல்லை. ஐ.நாசபையிலே இருக்கின்ற போர்குற்றம், பொறுப்புக்கூறல் போன்ற விடைங்களை எப்படி நீத்துப் போகச் செய்யலாம், அல்லது இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாக கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தச் சட்டத்தையும், எவ்வாறு இல்லாமல் செய்யலாம், வல்லரசுகள் இந்த அரசாங்கத்தை எதிர்க்கின்றபோது, அந்த வல்லரசுகளின் தேவைகளை நிறைவேற்றுகின்றபோது இந்த அரசாங்கம் நாட்டின் சில பகுதிகளை சில வல்லரசுகளுக்கு விட்டுக் கொடுப்பதனூடாக தமிழ் மக்களுக்குக் கிடைக்கின்ற உரிமைகளை நீத்துக்போகத்தான் செய்கின்றார்கள்.

குறிப்பாக எங்களது கட்சியினால் கொண்டு வரப்பட்ட வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அரசாங்கம்கூட எதிர்காலத்தில் எமது கையைவிட்டு நழுவிப் போகும் நிலமைதான் உள்ளது. அதற்கான பேரம்பேசல்கள், அதற்காக வல்லரசுகளுக்கு சில இடங்களை தாரைவார்த்துக் கொடுத்து தமிழர்களுக்கு அதனை இல்லாமல் செய்யும், வேலைகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே தமிழ் அரசியல் கட்சி தலைவர்கள் தமக்குள்ளே இருக்கின்ற விருப்பு வெறுப்புக்களைக் கடந்து தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக அனைவரும் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

குறிப்பாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கேட்டக வேண்டும். தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும், இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய அரசு 4 பில்லியன் நிதி உதவி செய்துள்ளது. எனவே இந்திய அரசாங்கம் இலங்கை அரசுக்கு நிபந்தனை இல்லாமல் செய்கின்ற உதவிகளைத் தவிர்த்து நிபந்தனையுடன் உதவி செய்யவேண்டும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்கவேண்டும், என்பதை இந்திய அரசுக்கு தமிழ் கட்சிகள் வலியுறுத்த வேண்டும். இதற்கெல்லாம் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒருமித்து ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் விட்டால் மாகாண சபை முறைமையும் கைநழுவிப்போகும். யுத்தம் நடைபெற்று முடிந்து 12 வருடங்கள் கழிந்த பின்னரும், ஐ.நா மனித உரிமை பேரவையிலும்கூட போர்குற்றம், என்பன கைநழுவிப்போகின்ற நிலமை இருக்கின்றது.

எனவே நாம் அளப்பெரிய தியாகங்களை இந்த மண்ணிலே செய்திருக்கின்றோம். எமது கட்சியில்மாத்திரம் சுமார் 3000 இற்கு மேற்பட்ட தோழர்கள் உயிர் நீர்த்துள்ளார்கள். அதிகளவு போராளிகள், 150000 மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள், பில்லியன் கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன, இவைகளையெல்லம் கருத்திற்கொண்டு, தமிழ் கட்சிககள் புத்திசாலித்தனமாக, ராஜதந்திர ரீதியாக, அறிவுபூர்வமதாகச் சிந்தித்து, பூகேள ரீதியான அரசியலையும் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டிய காலம் நெருகி வந்துள்ளது. அதற்காக வெகுவிரைவிலே தமிழ் கட்சிகளுக்கிடையே ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. எனவே மக்களுடைய துயரங்களைக் கருத்திற்கொண்டு அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட முன்வர வேண்டுமம் என அவர் இதன்போது தெரிவித்தார்.

கட்சியின் ஆதரவாளர்கள், உறுப்பினர்கள், மற்றும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட அருண் தம்பிமுத்து, உள்ளிட்ட பலர் இதன்போது கலந்த கொண்டிருந்தனர். அக்கட்சியின் தலைவரின் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து சுடரேற்றப்பட்டதுடன், கட்சியிலிருந்து அப்பகுதியைச் சேர்ந்த உயிரிழந்தவர்களின் புகைப்படங்கள் அவர்களின் உறவினர்களிடம் வழங்கப்பட்டதுடன் கட்சிக்காக பாடுபட்டவர்கள் பொன்னாடை போரத்தி, கௌரவிக்கப்பட்டனர்.

# வங்கிகளில் கடன் பெற்ற அரச ஊழியர்களுக்கு ஏமாற்றம்!!

(எப்.முபாரக் )

அரச சேவை உத்தியோகத்தர்களின் ஒய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து, வங்கிகளில் கடன்களைப் பெற்ற அரச ஊழியர்கள், மீண்டும் கட்டாய ஓய்வூதிய வயதெல்லை 60 ஆக குறைக்கப்பட்டதன் காரணமாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி இருப்பதாக அரச ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச ஊழியரின் ஓய்வூதிய வயதில்லை 65 ஆக அதிகரிக்கப்பட்ட போது அதிகளவான உத்தியோகத்தர்கள் அவரகளது எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை ஏற்படுத்தி பிள்ளைகளின் கல்வி, வீடு, திருமணம் போன்ற இன்னோரன்ன வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வங்கிகளில் கடன்களை பெற்றுக் கொண்டனர்.

கடன் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் உத்தியோகத்தரின் சம்பள வருமானத்தினை உறுதிப்படுத்தி 65 வயதுக்குட்பட்ட காலம் வரைக்கும் சம்பளத்தில் இருந்து அறவீடுகள் செய்வதற்கு இணக்கம் தெரிவித்த பின்பு வங்கிகளினால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அக் கடன்களைச் செலுத்தும் காலப் பகுதிகளுக்கு காப்புறுதியும் செய்யப்பட்டு கடன்களைப் பெற்றிருக்கிறோம் என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து இவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில்:-

இந்த நிலையில், 2022 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு செலவுத் முன்மொழிவுகளின் பிரகாரம் ஓய்வூதியம் பெறச் செய்யும் வயதை 65 வயதில் இருந்து 60 வயதாக அரசாங்கம் குறைத்துள்ளது.

இதன் காரணமாக கடன்களை மீள செலுத்துவதற்கு 65 வயது வரை தவணை அடிப்படையில் கடனைப் பெற்ற நாங்கள், 60 வயதில்

ஓய்வு பெற்று, குறித்த கடனை ஓய்வூதியத்திலிருந்து செலுத்துவதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளோம். இந்த நிலையில் ஓய்வூதி வருமானம் முழுவதையும் கடனை செலுத்த வேண்டிய நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

மேலும் வங்கிகளில் பெற்ற கடன்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கடன் நிலுவையின் தொகையை மாதாந்தம் ஓய்வூதியத்தில் இருந்து செலுத்துவதற்கு புதிய கடன்களைப் பெற வேண்டி ஏற்படும்.

புதிய கடன்களைப் பெற்றுக் கொள்ளும் போது நடை முறையில் உள்ள வட்டி விகிதமும் கடன் அறவீட்டுக் காலங்களும் நீடிக்கப்படும் போது, கடன் பெற்ற ஓர் அரச ஊழியர் தனது மரணம் வரைக்கும் பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீள முடியாத துன்பம் நிறைந்த தொடர் வாழ்க்கையையே சந்திக்க வேண்டி இருக்கின்றது.

இதன் காரணமாக இவ் வருடத்தில் ஓய்வு பெறப்போகும் அரச சேவையாளர்களுக்கு சலுகை அடிப்படையில் புதிய கடன்களை பெறுவதற்கும் வட்டி வீதத்தில் சலுகை அடிப்படையில் மாற்றங்களை அரசாங்கம் செய்து தர வேண்டும் என கோரிக்கை இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இராஜாங்க கல்வி அமைச்சர் திருணமலைக் கல்வி வலயத்திற்கான தரிசிப்பு





(அ . அச்சுதன்)

பாராளுமன்ற உறுப்பினரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான. அ . அரவிந்குமார் அவர்கள் (16) திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்திற்கு விஜயம் செய்து திருகோணமலைக் கல்வி வலயத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடந்தகால நிகர் நிலை, நிகழ் நிலை கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் சமகாலக் கல்விச் செயற்பாடுகள் பற்றி திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் கு. சிறீதரன் அவர்களையும், அவர்களது கல்வி அபிவிருத்திக் குழுவினரையும் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

. கல்வி இராஜாங்க அமைச்சர் அவர்களுக்கு திருகோணமலை வலயக்கல்விப் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்ட/ முன்னெடுக்கப்படுகின்ற கற்றல்-கற்பித்தல் மற்றும் கற்றல் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பற்றி திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களால் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான முன்வைப்பு செய்யப்பட்டிருந்தது. திருகோணமலைக் கல்வி வலயத்தின் கற்றல் சார் முன்னெடுப்புக்களை கௌரவ. கல்வி இராஜாங்க அமைச்சர் அவர்கள் வெகுவாகப் பாராட்டியிருந்ததுடன், திருகோணமலை வலயக்கல்வி அலுவலக உள், வெளிக் கட்டமைப்புக்களையும் கொளரவ. கல்வி இராஜாங்க அமைச்சர் அவரனகள் பார்வையிட்டு தனது ஆக்கபூர்வமான பின்னூட்டல்களையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு முன்பள்ளி சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு







(ரக்ஸனா)

மண்முனை தென் எருவில் பற்று, களு வாஞ்சிகுடி பிரதேச செயலகப் பிரிவின் மகிழூர்முனை சில்வபெல்ஸ் முன்பள்ளி பாடசாலையில் சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் அவர்களின் வழிகாட்டலில், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் கே.உதயகுமார் அவர்களின் தலைமையில் திங்கட்கிழமை (17) சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தில் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

முன்பள்ளிகளின் போசாக்கின்மையை குறைக் கும் பொருட்டு நாளாந்தம் முன்பள்ளி சிறார்க ளுக்கு போசணைமிக்க இலைக்கஞ்சிக் கோப்பை வழங்கும் வேலைத்திட்டம் களுதாவளை -01 வீனஸ் முன்பள்ளி மற்றும் துறைநீலாவணை -தெற்கு,01 களம் முன்பள்ளி பாடசாலைகளிலும் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்பள்ளி அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி. அருந்ததி சீவரெத்தினம், கருத்திட்ட முகாமையாளர் திருமதி.சோ. தமிழ்வாணி, எருவில் சமுர்த்தி வங்கி முகா மையாளர் பா.துரைராசசிங்கம், மாங்காடு சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ஆனந் தமோகன், கல்லாறு சமுர்த்தி வங்கி முகா மையாளர் எஸ்.ரவிந்திரன், கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.தேவதாசன் திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், சமூக அபிவி ருத்தி உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத் தர் (சமுதாய அடிப்படை அமைப்பு), சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், போதகர் கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள்,

# கல்லடி சிறுவர் இல்ல மாணவர்களால் சுவாமி தக்ஷயானந்த ஜீக்கு பிரியாவிடை வைபவம்!





மட்டக்களப்பு கல்லடி ராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷயானந்த ஜீ மகராஜ் நான்கு வருட கால ஜீவ சேவையை முடித்துக் கொண்டு இந்தியா திரும்புவதை முன்னிட்டு நேற்று முன்தினம் இல்ல மாணவர்களால் பிரியாவிடை வைபவம் நடாத்தப்பட்ட போது...

படங்கள் வி.ரி. சகாதேவராஜா

# பாடசாலைகளுக்கு இலவசமாக கணணிகள் வழங்கப்பட்டன





(தலவாக்கலை பி.கேதீஸ்)

சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளை ஊடாக நானு ஓயா எபஸ்போர்ட் மற்றும் நானுஓயா கார்லிபேக் ஆகிய பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக கணணிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் செயலாளர் ஏ.கமலாநந்தன் தலைமையில் நானுஓயா எபஸ்போர்ட் பாடசாலையில் (14) இடம்பெற்றது.

இதன்போது சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளை யின் செயலாளர் ஏ.கமலாநந்தன், அவரின் துணை வியார் திருமதி. கமலாநந்தன், சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் மத்திய மாகாண அமைப்பாளர் கள் ராஜ்குமார், ஆமஸ்ரோங், ஆசிரிய ஆலோசகர் என் டன் இக்னோசியஸ், எபஸ்போர்ட் பாடசாலையின் அதிபர் கலைச்செல்வன், கார்லிபேக் பாடசாலையின் அதிபர் சவரிமுத்து மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர். இதன் போது சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் செய லாளர் ஏ.கமலாநந்தன் மற்றும் அவரின் துணைவியார் திருமதி. கமலாநந்தன் ஆகியோர் கணணிகளை பாட சாலை நிர்வாகத்திடம் வழங்கி வைத்தனர்.




# விளையாட்டில் சாதனை படைத்த களுதாவளை தேசிய பாடசாலை மாணவர்கள் கௌரவிப்பு





(ரக்ஸனா)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக் கிடை யிலான மாகாணமட்ட விளை யாட்டுப் போட்டியில் பாடசாலை ரீதியில் முதலாம் இடம் பெற்ற மட் டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத் திற்குட்பட்ட களுதாவளை மகா வித் தியாலய தேசிய பாடசாலை மாணவர் களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் க.சத்தியமோகன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி கந்தளாய் லீலாரெத்தின விளையாட்டு மைதானத்தில் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடை பெற்றது. இதில் களுதா வளை மகாவித்தியாலய தேசிய பாடச ாலை 123 புள்ளிகளைப் பெற்று மாகா ணத்தில் முதலாவது இடத்தை சுவீகரித் துக்கொண்டது.

இங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் 15 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளிப்பதக்கங்கள், 8 வெண்கலப் பதக்கங்களை தனதாக்கிக்கொண்ட துடன், 9 விளையாட்டுகளில் புதிய ச ாதனைகளையும் நிலைநாட்டியுள்ளது.

மெய்வல்லுனர் போட்டியில் ஆண்க ளும் பெண்களும் முதலாம் இடத்தை பெற்றதுடன், அஞ்சல் ஓட்டத்தில் பெண்கள் முதலாம் இடமும் ஆண்கள் இரண்டாம் இடத்தையும் களுதாவளை தேசிய பாடசாலை பெற்றுள்ளது.

பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை தேடிக்கொடுத்த வீர, வீராங்க னைகள் கிராமத்தின் பிரதான வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட் டனர். வீதியின் இருமருங்கிலும் நின்ற பொதுமக்கள் மாணவர்களுக்கு உற்ச ாக வரவேற்பளித்தனர். பின்னர் பாடச ாலை முன்றலில் பாண்ட் வாத்தியங்கள் முழங்க அதிதிகளினால் மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

போட்டிகளில் மாணவர்கள் வெற்றி பெறக் காரணமாக இருந்த, வழிகாட் டிய உடற்கல்வி சார்ந்த ஆசிரியர்களும் பயிற்சியாளர்களும் இவ்விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

# வாழ் நாள் சாதனையாளர் விருதினை பெற்றுக்கொண்டார் சிவஸ்ரீ கிருஷ்ண கவிதாஸ் குருக்கள்

(இ.சுதாகரன்)

துறைநீலாவணையை ச் சேர்ந்த கிருஸ்ண பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வராவார். அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட கஞ்சிகுடிச்சாறு கிராமத்தில் இருந்து தொலைவில் உள்ள தாமரைக்குளம் என்னும் சிறு கிராமத்தில் பிறந்த கவிதாஸ் ஆரம்பப் படிப்பினை கஞ்சிசகுடிச்சாறு கணேசா வித்தியா லயத்திலும் உயர்தர படிப்பினை திருக்கோயில் மெ.மி.த.க.பாடசாலையிலும் கற்றதோடு மேல திக படிப்பினை இந்தியாவில் உள்ள பிள்ளை யார் பட்டியில் உள்ள வேத பாடசாலையில் வேதங்களைக் கற்ற ஒருவராவார்.



இவருடைய சமய சமூக பணிகளை கருத்தில் கொண்டு தேச பந்து தேச கீர்த்தி , தேச மானிய மற்றும் தேச சக்தி ஆகிய. விருதுகளை பெற் றதோடு இவர் சிறுவர் தொடர்பான பிரிவு மற் றும் சிவில் பாதுகாப்பு பிரிவிலும் இனைந்து பல சமூக சேவைகளை செய்து வருவதோடு தற்போது திருகோணமலை சம்பூர் கிராமத்தில் உள்ள ஆலயத்தில் சமய சேவையினை செய்து வருகின்றார்.

இவருடைய சமய மற்றும் சமூக சேவையினை கருத்தில் கொண்டு இந்திய அரசினால் வழங்கி கௌரவிக்கப்படும் வாழ்நாள் சாதனையாளர் விருதினை பெற்ற இலங்கையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளம் சாதனையாளராக சிவஸ்ரீ கிருஷ்ண. கவிதாஸ் குருக்கள் திகழ்கின்றார். இவருக்கான. வாழ்நாள் சாதனையாளர் எனும் இவ் விருதினை இந்திய அரசு 15.10.2022. அன்று வழங்கி கௌரவித்தது.

# சர்வதேச வறுமை ஒழிப்பு வராத்தினை முன்னிட்டு முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கி வைக்கும் நிகழ்வு





(திருக்கோவில் நிருபர் எஸ்.கார்த்திகேசு)

சர்வதேச வறுமை ஒழிப்பு வராத் தினை முன்னிட்டு முன்பள்ளிப் பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலகத்தின் சமுர்த்திப் பிரிவின் ஊடாக சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தினை முன்னிட்டு காஞ்சிரமகுடா முன்பள்ளிப் பாடச ாலை மாணவர்களுக்கு இலைக் கஞ்சி வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்று இருந்தன.

இந்நிகழ்வானது திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்திப் முகா மைத்துவப் பணிப்பாளர் ஏ.அரச ரெத்தினம் தலைமையில் காஞ்சிரம் குடா முன்பள்ளி பாடசாலையில் இடம்பெற்று இருந்தன.

இதன்போது காஞ்சிரம்குடா கணேஷா முன்பள்ளி மற்றும் மேசியா முன்பள்ளி ஆகிய இரு முன்பள்ளிப் பாடசாலை மாணவர் களுக்கு போசாக்குமிக்க இலைக் கஞ்சி சமைத்து வழங்கி வைக்கப் பட்டு இருந்தன.

இவ் வேலைத்திட்டமானது தொடர்ந்து சமுர்த்திப் பிரிவினால் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் அற்கான பணமும் முன்பள்ளி ஆசிரியர்களிடம் நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்வில் திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதி சேகரன் சமுர்த்தி தலைமை முகா மையாளர் பி.பரமானந்தம் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் பி.கம லேஸ்வரன் பாடசாலை அதிபர் தருமசீலன் சமுர்த்தி உத்தியோ கத்தர் திருமதி கே.வசந்தகுமாரி முன்பள்ளி ஆசிரியகைகள் என பல ரும் கலந்து கொண்டு இருந்தனர்.

# சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கும் செயற்பாடு





(வி.சுகிர்தகுமார்)

சர்வதேச வறுமை ஒழிப்பு தினத்தை முன் னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய முன்பள்ளி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங் கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக நேற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவுகள் அனைத்திலும் முன்பள்ளி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டன.

ஆலையடிவேம்பு பிரதேசசெயலாளர் வி.பபா கரனின் ஆலோசனைக்கு அமைய சின்னப்பனங் காடு மகாசக்திபுர மகாசக்தி பாலர் பாடசாலை யில் இடம்பெற்ற பிரதான நிகழ்வில் சமுர்த்தி தலைமையக முகாமையாளர் என்.கிருபாகரன் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் சிவப் பிரியா சுதாகரன் கருத்திட்ட முகாமையாளர் கே.சத்தியப்பிரியன் அபிவிருத்தி உத்தியோ கத்தர் திவாகரன் சமூக அபிவிருத்தி உத்தி யோகத்தர் வ.சந்திரகுமார் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் கே.விஜயபாலா மகாசக்தி நிறுவன முகாமையாளர் எஸ்.திலகன் நிதி உதவியாளர் வை. நிரஞ்சலா உள்ளிட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது தனவந்தர்களின் உதவியுடன் பெற்றார்களினால் தயாரிக்கப்பட்ட சத்துணவு இலைக்கஞ்சி வழங்கப்பட்டதுடன் வாராந்தம் திங்கட்கிழமை தோறும் இத்திட்டம் முன்னெ டுக்கப்படும் எனவும் இங்கு தெரிவிக்கப்பட் டது.

## அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டுக்கும் இந்தோனேசிய தூதுவருக்கும் இடையில் முக்கிய சந்திப்பு

சுற்றாடல் அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டுக்கும் இந்தோ னேசியா தூதுவர் டெவி குஸ்ரினா ரொபிங் அவர்களுக்குமிடையி லான சந்திப்பு சுற்றாடல் அமைச்சி ல் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது இருவ ரும் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர். குறிப்பாக காலநிலை மாற்றங்கள், சூழல் மாசடைதல், சுற்றாடல் பாதிப்பு கள் இரண்டு நாடுகளிலும் மக் களின் இயல்பு வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன? அவற்றை தீர்ப்பதற்கான வழிவ கைகள் என்னவென்பது குறித்து இரண்டு நாடுகளின் முக்கியஸ் தர்களும் தீவிர கவனஞ் செலுத் தினர்.



அத்துடன் நவம்பர் மாதம் எகிப் தில் நடைபெறவுள்ள இஙிக-27 உச்சி மாநாடு தொடர்பிலும் இச் சந்திப்பின் போது பேசப்பட்டது.

அதுமாத்திரமன்றி உச்சி மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் இலங்கை - இந்தோனேசிய சுற் றாடல்துறை அமைச்சர்கள் அங்கு சந்தித்து பேசுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

அத்துடன் பச்சைவீட்டு வாயுக் கள், இலாபகரமான சூழல் ஒத் திசைவு மரம் நடுகைத்திட்டம் தொடர்பிலும் பரஸ்பரம் கலந்து ரையாடப்பட்டதுடன் இரண்டு நாடுகளினதும் பரஸ்பர முதலீடு கள் குறித்தும் ஆராயப்பட்டது.

இலங்கையும் இந்தோனோசி யாவும் சீதோஷ்ண நிலையில் ஒரு மித்த தன்மை கொண்டிருப்பதால் அடிக்கடி இடம்பெறும் வெள்ள அனர்த்தங்கள், கடற்கொந்தளிப் புக்களை எவ்வாறு கட்டுப்படுத் துவது என்பது குறித்தும் ஆராயப் பட்டது.

## சர்வதேச இடர் அபாயக் குறைப்பு தினத்தை முன்னிட்டு

# உயிர் காப்பு விழிப்புணர்வு பயிற்சியும் கண்காட்சியும்





(ரக்ஸனா)

சர்வதேச இடர் அபாயக் குறைப்பு தினத்தை முன்னிட்டு உயிர் காப்பு விழிப்புணர்வுப் பயிற்சி யும் கண்காட்சியும் மாணவர்கள், பொதுமக்கள், படையினர், பொலிஸார் முன்னிலையில் ஞாயிற் றுக்கிழமை(16) இடம்பெற்றது.

திருகோணமலை நகரகடற்கரையில் சுவீடன்சர்வ தேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), இளைஞர் அபிவிருத்தி அகம், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம், இலங்கை பொலிஸ், கடற்படை ஆகியவை கூட்டிணைந்து இந்த விழிப் புணர்வு நிகழ்வை முன்னெடுத்திருந்தன.

நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் லயனல் குணதிலக்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களான டி.டி.வி. பத்திரண, லக்மால் குணத்திலக்க, உட்பட உயர் பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் கே. சுகுணதாஸ், இளைஞர் அபிவிருத்தி அகம் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் திரு கோணமலை வலய பிரதிக் கல்விப் பணிப்டளர் சுபாங்கி ஜோன்ஸன் உட்பட ஆசிரியர்கள், மாண வர்கள், பொதுமக்கள் ஆகி யோர் கலந்து கொண்டு உயிர் காப்பு நிகழ்ச்சி முன்னோட்ட கண்காட்சி யைக் கண்டு களித்தனர்.

நிகழ்வில் திருகோண மலை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லய னல் குணதிலக்க, இது குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு பெருந் துணை புரியும். நீரில் மூழ்கி மரணிப்போரில் மீட்டு உயிர் காப்பது ஒரு உயிர் கொடுத்து வாழ்வ ழிக்கும் ஒரு செயலாகும் வைத்தியர்கள் வருவதற்கு முன்னர் உயிர்காப்பதுதான் முழுமுதற் கடமை. கடந்த காலத்தில் திருகோண மலை கடலில் மூழ்கிய 27 வெளிநாட்டினர் உட்பட மொத்தம் 258 பேர் காப் பாற்றப் பட்டுள்ளார்கள்.

நீரில் மூழ்குவோர் நாமாக இருக்கலாம், நமது பெற்றோராக இருக் கலாம் சகோதரர்களாக இருக்கலாம், முன் பின் தெரியாதவர்களாக இருக் கலாம் சக மாணவர்களாக இருக்கலாம் யாராக இருந் தாலும் அவர்களை தக்க தருணத்தில் உயிர் காப்ப தற்கு நாம் உயிர்காப்புப் பயிற்சிகளைப் பெற்றி ருக்க வேண்டும். எனவே நீச்சலையும் உயிர்காப்பு பயிற்சிகளையும் கற்றுக் கொள்வது மிக முக்கிய மாக மாணவர்களுக்கு நல் லது என நான் கருதுகின் றேன். என்றார்.

# காட்டு யானைகள வீட்டுக்கு வந்து தாக்கியத்தில் முதியவர் பலி



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் போர தீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவி வுள்ள முனைத்தீவு கிராமத்திற்குள் திங்கட்கிழமை(17) அதிகாலை சுமார் 2.45 மணியளவில் 2 கட்டுயானைகள் உட்புகுந்துள்ளன.

இந்நிலையில் தமது வீட்டில் கணவன் மனைவி ஆகிய இரு முதியவர்களும், உறங்கிக் கொண்டிருந்த நிலையில் வெளியில் ஏதோ சத்தம் கேட்கின்றது, வளவினுள் மாடுகள் உட்புகுந்து விட்ட தாக நினைத்துக் கொண்டு கையில் தடி ஒன்றையும் எடுத்துக் கொண்டு வெளி யில் வாசலுக்கு வந்துள்ளார். அதே வேளை அவரது வாசலில் நின்ற காட்டு யானைகளில் ஒன்று அந்த முதியவரைத் தாக்கி அடித்துள்ளது. இதில் அவர் இஸ்த்தலத்திலேயே உயிரிழந்துள்ளார் என அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு காட்டு யானைகள் திங்கட் கிழமை(17) அதிகாலை 2.245 மணியள வில் இவ்வாறு முனைத்தீவுக் கிராமத் தினுள் புகுந்து அங்கிருந்த வாழை, மா, மற்றும் மதில் ஒன்றையும், சே தப்படுத்தும் காட்சி அருகிலிருந்து கண் காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது. எனினும், யானை இவ்வாறு முதியவ ரையும் தாக்கி விட்டுச் சென்றுள்ளது. இதில் முனைத்தீவுக் கிராமத்தைச் சே ர்ந்த 69 வயதுடைய கா.சங்கரப்பிள்ளை என்பவரே பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவமறிந்த பொஸிசார் மற்றும் கிராம சேவை உத்தியோகஸ்த்தர் உள்ளிட்ட பலரும் இஸ்த்தலத்திற்கு விரைந்து விசாரணைகளையும், மேல திக நடவடிக்கைகளையும் மேற்கொண் டுள்ளனர்.



**யாழ்ப்பாணம் அரசடி பகுதியில் கிஹோயின் போதைப்பொருளை ஊசி மூலம் உடலில் ஏற்றிய நான்கு சந்தேக நபர்கள் உ.பொ. பரிசோதகர் தெ. மேனன் தலை மையிலான பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டு உள்ளனர் இவர்களில் மூன்று நபர்களுக்கு திறந்த பிடியானை ஆறு காணப்படுகின்றது.**

# வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் ௨0௨ ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற வின்வோக் ௨0௨ நடை பவனி!!








(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் 202 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 'வின்வோக் -202' எனும் பவனி நேற்று ஞாயிற்றுக்கிழமை (16) திகதி காலை பாடசாலையின் அதிபர் திருமதி.தவத்திருமகள் உதயகுமார் தலைமையில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

இலங்கையில் பழமையானதும் புகழ்பூத்த மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையானது தனது 202 ஆண்டு நிறைவைக் சிறப்பிக்குமாக ஏற்பாடு செய்யப்பட்ட வின்வோக் (Vin walk) பவனி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் பாடசாலையிலிருந்து ஆரம்பித்து மட்டக்களப்பு கல்லடிப்பாலம் வரை சென்ற பவனி மீண்டும் பாடசாலையை வந்தடைந்து நிறைவுபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்த இப்பவனியில் மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார் கௌரவ அதிதியாகவும் மாநகர பிரதி முதல்வர் கந்தசாமி சத்தியசீலன், பழைய மாணவர் சங்க செயலாளர் தர்சினி சுந்தரேசன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்ட பவனியில் மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

பாடசாலையின் பாரம்பரியம், பெருமைகள், சாதனைகள் என்பனவற்றோடு சமூகத்தின் தேவைப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் இப்பவனி அமைந்ததுடன், சூழல் நேயமிக்கதாக இப்பவனி அமையப்பெற்றிருந்தமை குறிப்படத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் நெனசரி வேலைத் திட்டத்தின் கீழ் நூல்கள் வழங்கி வைப்பு



(ஏ. எல்.எம்.ஷினாஸ்)

கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் 'நெனசர' பாடசாலை நூலக அபிவிருத்தி வேலை திட்டத்தின் கீழ் ஒக்டோபர் மாத தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட செயலகம் கலாசார அலுவலர்கள் திணைக்களத்தோடு இணைந்து ஏற்பாடு செய்த பாடசாலை நூலகங்களுக்கு நூல்களை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் உரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் நிந்தவூர் பிரதேச செயலாளருமான ஏ.எம் அப்துல் லத்தீப், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாகத் அலி, அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரி.எம்.றிம்ஸான், மல்ஹறுல்



வழங்கி வைக்கும் நிகழ்வு (17) சாய்ந்தமருது மல்ஹறுல் சம்ஸ் மகா வித்யாலயத்தில் (தேசிய பாடசாலை ) நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஷிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூல் தொகுதிகளை வழங்கி வைத்ததுடன், பாடசாலைகளில் இருந்து மாணவர்களின் வாசிப்பு பழக்கத்தை சம்ஸ் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம்.நபார் உட்பட பிரதேச செயல்களில் கடமையாற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழி மூலமான பிரதேச செயலகங்களின் கீழ் உள்ள தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளின் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## கல்முனை விக்டோறியஸ் விளையாட்டு கழகத்தின் ௨0௨3 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை தேரிவு



(பாறுக் ஷிஹான்)

கல்முனை விக்டோறியஸ் விளையாட்டு கழகத்தின் புதிய தலைவராக தலைவர் ஏ.டபிள்யூ.எம் ஜெஸ்மீன் தெரிவுசெய்யப்பட்டார்.

கல்முனை விக்டோறியஸ் விளையாட்டு கழக 2023 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபையை தெரிவு செய்வதற்கான கழக வருடாந்த பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை (16)கல்முனை அல்-பஹ்றியா மகா வித்தியாலயத்தில் மாலை சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது கல்முனை விக்டோறியஸ் விளையாட்டு கழகத்தின் புதிய தலைவராக தலைவர் ஏ.டபிள்யூ.எம் ஜெஸ்மீன் தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் பொதுச்செயலாளர் ஏ.ஜே.சமீமும் பொருளாளராக பொருளாளர் நதீர் பாறுக் உட்பட பல்வேறு பதவி நிலைகளுக்கு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன் போது இக்கூட்டத்திற்கு ஏ.எம் றியாஸ் தலைமை தாங்கியதுடன் ஏ.ஜே சமீம் நெறிப்படுத்தி புதிய நிர்வாக தெரிவு தொடர்பில் உத்தியோக பூர்வமாக சபையில் அறிவித்தனர்.இதன் படி பொதுக் கூட்ட ஆரம்பத்தில் புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு தொடர்பில் நிகழ்வு இடம்பெற்றதுடன் கழக வளர்ச்சிக்காக ஆலோசனை வழங்கியவர்கள் ஒத்துழைப்பு வழங்கியவர்கள் நினைவு கூறப்பட்டு சிறு உரைகள் நிகழ்த்தப்பட்டன. இதன் போது இப்பிராந்தியத்தை மையப்படுத்தி எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதற்கமைய தவிசாளர் -ஏ.எம். றியாஸ், துணை தவிசாளர் -பி.எம் கலில் றகுமான், தலைவர் -ஏ.டபிள்யூ.எம் ஜெஸ்மீன், பிரதி தலைவர் -ஏ.மன்சூர் , உப தலைவர் -என்.சங்கீத், உப தலைவர்- ரி.எம் றிபாய் ,பொதுச்செயலாளர்- ஏ.ஜே.சமீம் , உப செயலாளர்- எஸ்.என்.ராஜ்குமார், பொருளாளர்- நதீர் பாறுக், உப பொருளாளர்- ஏ.எஸ்.றம்ஸீர் , கணக்கு பரிசோதகர் -சுந்தரலிங்கம் ,இணை முகாமையாளர்கள் -ஏ.எல்.எம் சலீம், சபீர் ,ஊடக செயலாளர்- பாறுக் ஷிஹான், பிரதம பயிற்றுவிப்பாளர்- யு.எல் ஹிலால் ,பயிற்றுவிப்பாளர்- (பந்து வீச்சு) பி.மதன், பயிற்றுவிப்பாளர் -(துடுப்பாட்டம்) எம்.எஸ் அஸ்பர், பயிற்றுவிப்பாளர் - (களத்தடுப்பு) எம் .செந்தூரன் ,இணைப்பாளர்- ஏ.எம் நாஸர் ,பிரதான இணைப்பாளர்- பி.எச்.எம் முபீன் ,இணைப்பாளர் -ரி.எம் ஜஹான் ,இணைப்பாளர் -ஏ.லவக்குமார், இணைப்பாளர் -றகுமான் , போசகர்கள் -ஹிபத்துல் கரீம் ,எம்.பி.அக்மல், எம்.ஏ நஜீமுத்தீன், ஏ.எல் றபீக் ,வி.வரதன் , ஆலோசகர்கள் வைத்தியர்களான ஜெ.எம் றிலான் ,ஜி.எம் கமால் எஸ்.தர்மலிங்கம் ஆகியோர் புதிய நிர்வாக தெரிவில் உள்வாங்கப்பட்டனர்.

சுமார் 35 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருகின்ற இக்கழகத்தில் பல்லின மக்கள் உள்வாங்கப்பட்டு இயங்குவதுடன் பிரதேசவாதமற்ற ஒரு சிறப்பான கழகமாக இப்பிராந்தியத்தில் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பிராந்தியத்தில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் கொரோனா அனர்த்த காலங்களில் சிறப்பாக செயற்பட்ட ஊடகவியலாளர் பாறுக் ஷிஹான் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் கழகத்தின் தகவல் தொடர்பு ஊடக செயலாளராக தெரிவு செய்யப்பட்டார்.

## அதிபர் திறன் விருத்தி பாடநெறி சான்றிதழ் வழங்குவதில் தாமதம் அதிபர்கள் கவலை

இலங்கையின் அரச பாடசாலைகளில் பாடசாலை நிறுவனப் பொறுப்பினை எடுத்து நடாத்துவதற்காக உருவாக்கப்பட்டதே இலங்கை அதிபர் சேவை யாகும்.

அதிபர் சேவை புதிய பிரமாணக் குறிப்பிற்கு அமைய அதிபர் சேவை தரம் 3 க்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள் அதிபர் சேவை தரம் 2 ற்கு பதவி உயர்வு பெறுவதாயின் கட்டாயமாக அடிப்படை அதிபர் திறன் விருத்தி பயிற்சி பாடநெறியினை (BPP) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இந்நிலையில் 2016 இல் அதிபர் சேவை தரம் 3 ற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிபர்களுக்கு இப்பயிற்சி பாடநெறி பல மாகாணங்களில் நிறைவடைந்துள்ளது.

அதற்கான சான்றிதழை சில மாகாணங்கள் தமது கல்வி வலயங்களினூடாக உரிய அதிபர்களுக்கு அவர்களின் பதவி உயர்வினை கருத்தில் கொண்டு வழங்கிவிட்டன. இந்நிலையில் கிழக்கு மாகாணத்திலும் அதிகமான தரம் 3 அதிபர்களுக்கு இரு கட்டங்களில் இப்பயிற்சி பாடநெறி கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் மட்டக்களப்பு சத்துருகொண்டான் சர்வோதய நிலையத்தில் வதிவிட செயலமர்வாக நடந்து முடிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் பயிற்சி பாடநெறியை நிறைவு செய்த அதிபர் சேவையினருக்கு சான்றிதழ் வழங்குவதில் இழுத்தடிப்பு நிலை காணப்படுவதாக கூறப்படுகின்றது.

இச்சான்றிதழை வழங்கினால் தான் பதவி உயர்வுக்காக அதிபர் சேவை தரம் 3 இலுள்ள வர்கள் தரம் 2 ற்கு விண்ணப்பிக்க முடியும்.

சுமார் 4000 மேற்பட்ட அதிபர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் கடமை புரிகின்றனர். இச்சான்றிதழ் வழங்குவதிலுள்ள தாமதம் அவர்களின் பதவி உயர்வினை தாமதிக்கலாம்.

மேலும் புதிய பாடசாலைக்கு அதிபர் பதவிக்காக விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்காக செல்கின்ற போது புள்ளிகளைப் பெறுவதற்கு தடையாக அமைவதோடு அதிபராக பாடசாலைப் பொறுப்பைப் பெறுவதற்கும் சவாலாக அமையலாம்.

இது குறித்து அதிபர் சேவை பதவியுயர்வை எதிர்பார்த்திருக்கும் அதிபர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## பல்கலைக்கழக மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு



(ஹஸ்பர்)

கிண்ணியா மற்றும் கந்தளாய் இளங்கலை பட்டதாரிகளின் ஏற்பாட்டில் 2021/2022 ம் ஆண்டு தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்பட்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் இடம் பெற்றது.

கிண்ணியா ,கந்தளாய் போன்ற தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவ மாணவிகளே இவ்வாறு (16)கௌரவிக்கப்பட்டார்கள்.

இதன் போது குறித்த 2022 ம் ஆண்டில் உள்வாங்கப்பட்ட மாணவர்கள் பிரதம அதிதிகளால் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிண்ணியா நகர சபை தவிசாளர் எம் எம் நிவாஸ் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மொஹமட் றிப்தி,அரபு மொழித் துறை விரிவுரையாளர் எம்.ஹபீபுள்ளா உட்பட பல்கலைக் கழக மாணவ மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.

## பட்டிருப்பு தேசிய பாடசாலையில் பல்கலை நுழைவு மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் , தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடியில் 2020 ல் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள பல்கலைக்கழக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட ஓர் தொகுதி மாணவர்களை பாடசாலை காலை ஆராதனையின் போது ஆசிரியர்கள் , மாணவர்கள் முன்னிலையில் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் எம்..சபேஸ் குமார் தலைமையிலும் வழிகாட்டலிலும் பகுதித் தலைவர்களின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள் , ஆசிரியர்கள் , மாணவர்கள் , பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள் மற்றும் கல்வி சாரா உத்தியோகஸ்தர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.



# இனவாதத்தம், ஊழல் மோசடிகளால் சீரழிக்கப்பட்ட இலங்கையின் இன்றைய அவலநிலைக்குத் தீர்வைக்காண முடியாத நிலையில் ஆட்சியாளர்கள்

இலங்கைசுதந்திரமடைந்தகாலத்தில் இருந்து,74 ஆண்டுகளாக 74 சதவீதமான சிங்கள மக்களின் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு,இனவாத அரசியல் செய்யப்பட்டு வருகின்றது. இதனால் தேசிய ஒற்றுமை,தேசத்தின் அபிவிருத்தி,தேசத்தின் இறையாண்மை,தேசத்தின் கௌரவம் யாவும் நலிவடைந்து பலவீனமடைந்துள்ளன.இதனால் சீரழிக்கப்பட்ட இலங்கையின் அவலநிலைமைகள் சமூக பொருளாதார அரசியல் ரீதியாக வெளிப்பட்டுள்ளன.

இலங்கை அபிவிருத்தி அடைந்துவரும் நடுத்தர வருமானமுடைய நாடாக இருந்தது,அண்மையில் அமைச்சரவையினால் இலங்கை வறுமைக்குரிய ஏழை நாடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.உலக நாடுகள்,உலக நிறுவனங்களிடம் இருந்து முழுமையாகக் கையேந்துவதற்கு இந்தப் பொதுஜனப்பெரமுன அரசாங்கம் தயாராகிவிட்டது.அதாவது உள்நாட்டில் இனவாத அரசியல் செய்த இந்த அரசாங்கம் வெளிநாடுகளிடம் பிச்சைப்பாத்திரம் ஏந்நதுவதை கௌரவக்குறைவாக நினைக்க முடியவில்லை.இந்த அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் பலவற்றுக்கு அழைப்புவிடும் நிலையை இரண்டரை ஆண்டுக்குள் உருவாக்கி விட்டது இந்த அரசாங்கம்.அரசின் ஏழ்மை நாட்டுப் பிரகடனத்திற்கு முன்பாக இலங்கையை உலக உணவு விவசாயத்தாபனம் பட்டினி வலய நாடுகளில் ஒன்றாக அறிவித்துள்ளது.அதேவேளை இலங்கையில் 63 இலட்சம் மக்களுக்கு உணவுப்பாதுகாப்பு இல்லை என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.அதாவது 10 மனிதர்களில் 3 மனிதர்கள் உணவுப்பாதுகாப்பு இல்லை எனக்கூறப்பட்டுள்ளது.இலங்கையில் போசணைக்குறைபாடு 14 வீதமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.ஊட்டச்சத்து இன்மை,மந்த போசண்ணை மட்டம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது.அந்தவகையில் குழந்தைகள்,சிறுவர்கள்,கர்ப்பிணித்தாய்கள் மந்தபோசணையால் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.இலங்கை இருண்ட யுகத்தை நோக்கிச் செல்வதாக அரச வைத்தியர் சங்கம் எச்சரித்துள்ளது.

எமது நாட்டின் உணவுப்பணவீக்கம் 94 சதவீதமாக அதிகரித்துள்ளது.உலகளவில் இலங்கை பணவீக்கத்தில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.பணவீக்கத்தில் இலங்கை எத்தியோப்பியாவையும் முந்திவிட்டது.அத்தியாவசிய உணவைப் போதியளவு கொள்வனவு செய்ய முடியாமல் மக்கள் வருவாயற்ற நிலையில் திண்டாடுகிறார்கள்.இதனால் வறிய குடும்பங்கள்,மத்தியதர குடும்பங்கள் உண்ணும் உணவின் அளவைக் குறைத்துள்ளனர்.ஊட்டச்சத்தான உணவுகள் எட்டாக்கனிகளா மாறியுள்ளன.முட்டையொன்றின் விலை 50 ரூபாவில் இருந்நு 60 ரூபாய்வரை விற்கப்படுகின்றன.ஒரு போத்தல் பாலின விலை 150 ரூபாவினைக் கடந்துள்ளது.பால்மாவின் விலை மூன்று மடங்குகளாக அதிகரித்துள்ளது.அரிசி,கோதுமைமாவின் விலைகள் மூன்று நான்கு மடங்குகளாக ஏறியுள்ளன.

தற்போதைய அரசாங்கம் அரசுக்கு சேரவேண்டிய வரிகளை குறைப்புச் செய்தமையால் 60,000 கோடி ரூபாய்களை இழந்துள்ளது.சீனி வரிக்குறைப்பால் 1600 கோடி ரூபாய்களை அரசு இழந்துள்ளது. கச்சாய் எண்ணெய்,நிலக்கரி,தேங்காய் எண்ணெய்,வெள்ளைப்பூடு இறக்குமதிகள் என்று இறக்குமதிகள் அனைத்திலும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அரசு இழந்துள்ளது. அதேவேளை விவசாயத்திற்கான இரசாயனப்பசளை இறக்குமதியை ஜனாதிபதி உடனடியாக நிறுத்தியதால் விவசாய விளைச்சல் 60 வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது.இதனால் உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் விலைகள் இரண்டு மூன்றுமடங்குகளாக உயர்ந்துள்ளன.இப்படியாக அரசு ஒரு பக்கம் வருவாய்களை இழக்க மக்களுக்கான மானியங்கள்,உதவிகள்,சேவைகள் பாரியளவில் குறைந்துள்ளன.2020 களில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்களைப்பெற்றிருந்தால் பொருட்களின் விலையேற்றங்களைக் கட்டுப்படுத்தி இருக்கலாம்,ரூபாவின் பெறுமதியும் வீழ்ச்சியடையாமல் பேணியிருக்கலாம்.ஆனால் ரூபாவின் பெறுமதி டொலருக்கு நிகராக ரூபாய் 180 இல் இருந்து ரூபாய் 360 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது.ஆனால் மக்களின் வருமானம் குறைந்துள்ளது.இன்றைய விலையேற்றத்துடன் மக்கள் போட்டியிடுவதாக இருந்தால், அவர்களது வருமானம் மூன்று மடங்



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினர், மட்டக்களப்பு

காக அதிகரிக்க வேண்டியுள்ளது.ரூபாய் 60,000 மாதாந்தம் வருமானம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் வருமானம் 180,000 வரை அதிகரிக்கப்பட வேண்டும்.ஆனால் உத்தியோகத்தர்களின் வருமானம் எதவும் அதிகரிக்கப்படவில்லை. தினக்கூலியாக பணியாற்றும் தொழிலாளியின் சம்பளம் ரூபாய் 2000 ஆக இருந்தால் அது ரூபாய் 6000 ஆக உயர்த்த வேண்டும்.அதற்கான சாத்தியங்கள் எதுவுமில்லை.ஆனால் எதிர்மறையாக மக்களின் நேர்வரிகள் மறைமுக வரிகள் அதிகரித்தவண்ணம் உள்ளது.மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதாகவே அரசின் செயற்பாடுகள் உள்ளன.ஒவ்வொரு குடிமகனும் 10 இலட்சம் ரூபாய்க்கான கடனாளியாக்கப்பட்டுள்ளான். எமது நாட்டின் வெளிநாட்டுக்கடன் தொகை 7000 கோடி டொலர்களை (2,520,000 கோடி ரூபாய்கள்) தாண்டியுள்ளது.இலங்கையின் கடன்வட்டி மாத்திரம் 54,000 கோடி ரூபாய்களாக அதிகரித்துள்ளது.

நாட்டில் வருவாயற்று வாழமுடியாத நிலையில் மணித்தியாலத்திற்கு 32 என்ற அடிப்படையில் மக்கள் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.இதுவரை 7 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் நாடு கடந்து சென்றுள்ளனர் என்றும்,அதில் 1600 இற்கு மேற்பட்ட வைத்தியர்களும் அடங்குவர் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.அடுத்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சி என்பது மறை ஆறு கணியமாக மாறும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.வறுமை காணமாக 30 வீதமான பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.அதேவேளை போதையூட்டும் கஞ்சா உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்,இரவு விடுதிகள்,மதுபான நிலையங்களுக்கான இராக்கால நேரத்தை நீடிக்க வேண்டும் என்றும் பெண் இராஜாங்க அமைச்சர் ஒருவர் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றார்.அந்தவகையில், கலாசாரம் சீரழிந்தாலும் காசு பணத்தை அரசு திரட்ட வேண்டும் என ராஜாங்க அமைச்சர் ஆலோசனை கூறுகின்றார்.

வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்தும் நம்பிக்கைத்தர நிலையில் இலங்கை 3சீ,2சீ,சீ,ஆர்டி என்று கட்டம் கட்டமாகத் தரம் தாழ்த்தப்பட்டு கடைசிக்கட்ட நம்பிக்கையற்ற நாடாக இருப்பதாக பிச் நிறுவனம் கணிப்பிட்டுள்ளது.



தமிழ் அரசியல்கைதிகளின்
சிறைவாசம்,யுத்தத்தால் விதவைகளாக்கப்படவர்கள்,
அநாதைகளாக்கப்பட்டவர்கள்,
அங்கவீனர்களாக்கப்பட்டவர்கள்,
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்,
சீரழிக்கப்பட்ட பொருளாதார வாழ்வாதாரம் என்று
பிரச்சினைகள் இடியப்பச்சிக்கலாய் தொடர்கின்றன.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்
உறவினர்களது போராட்டம் 2030 நாட்களகத்
தொடர்கின்றன். அப்பிரச்சினையை ஒருயிருக்கு
2 இலட்சம் ரூபாய் என்ற ரீதியில், கொடுத்து
சமாதி கட்டிவிட தற்போதைய
அரசாங்கம் நினைக்கின்றது. இதன்
மூலம் ஐக்கிய நாடுகள் சபையினையும்
ஆட்சியாளர்கள் ஏமாற்ற நினைக்கிறார்கள்.

இலங்கையும் இந்து சமுத்திரப்பிராந்தியமும் சக்தி வாய்ந்த நாடுகளின் பலப்பரீட்சைக்ககளமாக மாறியுள்ளது.சீனா,இந்தியா,யப்பான்,அமெரிக்கா போன்ற நாடுகளின் அதிகாரப்போட்டிக்களமாக இலங்கை மாறியுள்ளது.அதிலும் குவாட் அமைப்பு நாடுகளும் சீனாவும் தமது செலவாக்கினை இலங்கை மீது செலுத்த ஆரம்பித்துள்ளன.சீனா இலங்கைக்குப் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை வழங்கி கடன்பொறிக்குள் சிக்க வைத்துள்ளது.இலங்கையின் வளங்கள் பட்ட கடன்களுக்காக விற்கப்படும் சூழல் உருவாகியுள்ளது.அம்பாந்தோட்டைத்துறைமுகம்,கொழும்புத்துறைமுக முனையங்கள் போன்றவை இவ்வாறு நீண்டகாலக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.இலங்கை உணவுக்கப்பலுக்காக பிறநாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்க,சீனாவின் உளவுக்கப்பல் இலங்கைக்கு வந்ததால் இந்தியா அதிருப்தியும் ஆத்திரமும் அடைந்துள்ளது.உலக வல்லரசுகளில் ஒன்றான பிரித்தானியா 90,000 படைகளை மாத்திரம் கொண்டிருக்க,சிறிய ஏழ்மை நாடான இலங்கை 331,000 படைகளைக் கொண்டுள்ளது.எனவே படைகளுக்காக இலங்கை அதிகளவான பணத்தினைச் செலவு செய்து கொண்டிருக்கிறது.யுத்தம் இல்லாத நாட்டில் பெருந்தொகையான படைகள் எதற்கு என்ற கேள்வி எழுகின்றது.யுத்தம் முடிந்தால் நாடு விரைவாக அபிவிருத்தியடையும் என்ற இலங்கை மக்களின் எதிர்பார்ப்பு ஏமாற்றமாக மாறியுள்ளது.யுத்த காலத்தில் இல்லாத பொருளாதார நெருக்கடி யுத்தத்தின் பின்னர் தோன்றியுள்ளது. ஊழல்,மோசடி,கையூட்டு,தரகுப்பணம்,கறுப்புச்சந்தை உழைப்பு எனபவை அரசியலில் சகஜ நிகழ்வுகளாகிவிட்டன.போதைப்பொருள் வியாபாரம் கட்டுப்டுத்த முடியாத புற்று நோயாக நாடையும்,மக்களையும் பாதித்துள்ளது.

தமிழ் அரசியல்கைதிகளின் சிறைவாசம்,யுத்தத்தால் விதவைகளாக்கப்படவர்கள்,அநாதைகளாக்கப்பட்டவர்கள்,அங்கவீனர்களாக்கப்பட்டவர்கள்,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்,சீரழிக்ககப்பட்ட பொருளாதார வாழ்வாதாரம் என்று பிரச்சினைகள் இடியப்பச்சிக்கலாய் தொடர்கின்றன.வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது போராட்டம் 2030 நாட்களகத் தொடர்கின்றன்.அப்பிரச்சினையை ஒருயிருக்கு 2 இலட்சம் ரூபாய் என்ற ரீதியில், கொடுத்து சமாதி கட்டிவிட தற்போதைய அரசாங்கம் நினைக்கின்றது.இதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையினையும் ஆட்சியாளர்கள் ஏமாற்ற நினைக்கிறார்கள்.

பேரினவாத அரசியலால் இனமுரண்பாடுகள்,இனப்பிரச்சினை, இனப்போர் என்பன ஏற்பட்டன.இதனால் சமூக பொருளாதார அரசியல் அவலங்கள் ஏற்பட்டுள்ளன.இந்த நிலையில் நம்நாடு பட்டினி வலய நாடாகியது,அந்த நிலையில் எமது நாட்டை ஏழை நாடு என்று இலங்கை அரசாங்கம் தானாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.மத்தியதர,தொழிலாளர் வர்க்க மக்களை வறுமைக்குளாக்கி நாட்டை ஏழை நாடாக்கி அயல் நாடுகளிடம் கையேந்திய போதிலும்,தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு இன்னும் தாயாராக இல்லை.நாட்டின் வளங்களை விற்று நாட்டை அதல பாதாழத்தில் வீழ்த்தினாலும் அதிகாரம் அடக்குமுறை ஒடுக்குமுறையைக் கைவிட ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.74 ஆண்டுகள் இனவாத ஆடசியால் ஏற்பட்ட இழப்புகள் அவலங்கள் துயரங்களை பேரினவாத ஆட்சியாளர்கள் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை.எனவே தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வும் இல்லை,நாட்டின் அபிவிருத்திக்கான வழிகளும் இல்லை.அறிவியல் சிந்தனை செயற்பாடுகளோடு பயணித்த பல நாடுகள் ஐக்கியம்,அபிவிருத்தி,ஆக்கம் என்ற நேரிடையான முன்னேற்றங்களை அடைந்துள்ளன.அதேவேளை இன,மத,மொழி,நிற,குல அடிப்படைவாதங்களுடன் அநீதியான பிற்போக்கான பாதைகளில் பயணித்த பல நாடுகள் ஐக்கியம் அபிவிருத்தி இன்றி அழிவுகளையே சந்தித்துள்ளன.அந்த நாடுகளில் எமது நாடும் ஒன்றாகிவிட்டது தான் வேதனையான பதிவாகும்.அடிப்படைவாத ஆட்சி முறைமை மாற்றப்படாதவரை,இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை இந்த நாட்டுக்கு விடிவு கிடையாது.இதுதான் 74 வருட கால இலங்கையின் வரலாற்றுப் படிப்பினையாகும்.

# இலங்கையில் 2000 ஆண்டுகளுக்கு முன்பு அகத்தியர் வாழ்ந்த இடத்திற்கு சித்தர்கள் குரல் அமைப்பு விஜயம்!

## அகத்தியர் நீராடிய மகாவலி கங்கையில் மரகதலிங்கத்திற்கு அபிஷேகம்!















2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழிக் கான 'அகத்தியம்' என்ற முதல் இலக்கண நூலை எழுதியவரும் சப்தரிசிகளில் ஒருவரு மான சித்தர்களுக்கு எல்லாம் சித்தராக இருந்த அகத்தியர் இலங்கையில் வாழ்ந்த கங்கு வேலி பிரதேசத்திற்கு நேற்றைய தினம் இலங்கை சித்தர்கள்குரல்அமைப்பினர்விஜயம்செய்தனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி ஜி தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கூடிய கிளிவெட்டி கிராமத்திற்கு அருகிலுள்ள கங்கு வேலி எனும் இடத்திற்கு விஜயம் செய்தனர்.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜி , மகேஸ்வரன் சுவாமி, கனடாவில் இருந்து இதனை நேரடியாக காண வேண்டும் என வருகைதந்த பிரபல ஆன்மீக பரோபகாரி அன்பர் குமார், காரைதீவைச் சேர்ந்த ஆன்மீக ஆர்வலர்களான கே.ஜெயசிறில், வி.ரி.சகாதேவராஜா மற்றும் தமிழகரன் சனா , சனுஸ்காந்த், பிரசானந்த் ஆகியோர் பயணத்தை மேற்கொண்டார்கள்.



அங்கு அகத்தியர் ஸ்தாபனம் என் அமைப்பு அகத்தியர் ஆலயம் ஒன்றை அமைத்து, அவர் வழிபட்ட ஆதிசிவனுக்கு ஆலயத்தை பல சவால்களுக்கு மத்தியில் அமைத்து வழிபட்டு வருகின்றார்கள்.

தாபனத்தின் தலைவர் ஓய்வுநிலைஅதிபர் வேலுப்பிள்ளை தவராசா , அங்கு இருக்கின்ற அகத்தியர் வழிபட்ட சிவலிங்கம் கல்வெட்டுக்கள் மற்றும் மருத்துவ பல்கலைக்கழகம் தடயங்கள் அனைத்தையும் காண்பித்தார்கள்.

தொடர்ந்து அங்கிருந்து ஐந்து கிலோ மீட்டர் காட்டுக்குள்ளால் சென்று அகத்தியர் ஆடி அமாவாசை தீர்த்தமாடிய மகாவலி கங்கை நதி தீரத்திற்கு அழைத்துச் சென்றார்கள் .

அங்கு சிவன் ஆலய பீடம் ஒன்று இருக்கிறது .

அங்கு சித்தர் குரல் அமைப்பினர் முறைப்படி எண்ணெய் வைத்து மாணிக்க கங்கையில் நீராடி, மரகதலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தனர்.

அதன் பீடத்தில் லிங்கத்தை வைத்து வில்வம் இலைகள் மற்றும் மலர்களால் அர்ச்சனை செய்து பாராயணம் செய்தார்கள். 208 சித்தர்களை வரவழைக்கும் மந்திரம் சிவசங்கர் ஜி யால் ஓதப்பட்டது.

தாபனதலைவர் வே.தவராசா ,சேனையூர் ,பாடசாலை அதிபர் கே.கணேசலிங்கம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு அமுது படைத்தனர்.


உதவிக் கல்விப்பணிப்பாளர்
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு நிருபர்)

**-அகத்தியர்**

அகத்தியர் என்பவர் 'தமிழி' என்ற தமிழ் சித்தர்களில் முதன்மையானவராகவும், சப்த ரிஷிகளில் ஒருவராகவும் அறியப்படுகிறார். சிவபெருமானின் திருமணத்தினைக் காண அனைவரும் வடதிசைக்கு வந்தமையால், இவர் தென்திசைக்குப் பயணப்பட்டு அதைச் சமன்செய்ததாகவும், சிவசக்தி திருமணத்தினைத் தமிழகத்திலிருந்து கண்டவராகவும், தமிழைச் சிவபெருமானிடமிருந்து கற்று உணர்ந்து மற்றவருக்கும் போதித்த ஆசானும் ஆவார்.

இவரே 'அகத்தியம்' எனும் தமிழ் மொழிக்கான முதல் இலக்கண நூலை இயம்பியவராவார்.

இவரின் நூல்களை பல்வேறு தமிழ் ஆர்வலர்களும் காண்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

★நீங்கள் செய்த பாவங்களால் வரும் பலனை குறைக்க இறைவனுக்கு உரிமையுண்டு.★

ஆனால் நீங்கள் செய்த புண்ணியங்களின் பலனை குறைக்க இறைவனால் கூட முடியாது.என்கிறார் அகத்தியர்.